Phone: No 4502
விலை முக்காலணா

Regd: No. M 5458
இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலைமணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர் : மு. கருணாநிதி

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0
நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு.
மானேஜர்
"மாலை மணி"

மாலை 2 | சென்னை : 13—5—51 ஞாயிற்றுக்கிழமை ★ வெளியூர் : 14—5—51 திங்கட்கிழமை | மணி 156

கூனன் நிமிர்ந்துவிட்டான-குருடன்பார்வை பெற்றுவிட்டான்

.... (0) ....

வோட்டுப்பெறவும் முடியும்; வோட்டுத் தரவும் முடியும்?

——(:0:)——

சேலம் மாநாட்டில் பொதுச் செயலாளர் போர்ப்பரணி

சேலம், மே 6—

சேலத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற சேலம் மாவட்ட தி. மு. கழக மாநாட்டில் பொதுச்செயலாளர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவு, கழக வளர்ச்சியின் எதிரொலியாக இருந்தது. பெருமிதத்தோடு கூடிக்கிடந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரது கருத்து வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் குறுகிய காலத்தில் நாட்டில் காட்டியிருக்கும் மகத்தான சாதனைகள் குறித்து அவர் பட்டியல் தந்தபோது, மக்கள், கடலொலி போலக் கைதட்டினர். அவர் குறிப்பிட்டதாவது:-

"இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்திலே நாம் பெருமிதமாக வளர்ந்துவிட்டோம். நமது இயக்கம், பெற்றிருக்கும் இலட்சிய வளர்ச்சியைக் காணப்பெரிதும்மகிழ்கிறேன். நாம், திராவிட கழகம் என்ற அமைப்பிலிருந்து பிரிந்தபோது பலர் பலவிதமாக நம்மைப் பற்றி ஆரூடங் கணித்தனர். பலருடையது ஆபத்தான ஆரூடம்! வேறு பலருடையது அவசரமானது! 'எப்படி இவர்களால் முடியும்?' இவ்விதம் சிலர். 'இவர்கள் எங்கே போகப் போகிறார்கள் நம்மிடம் தானே வந்துசேர வேண்டும்'-இதுபோல இன்னொரு விதம். ஆனால் நாம் இந்த ஆபத்தான ஆரூடங்களுக்கோ, அவசரக்காரர்களின் முடிவுகளுக்கோ இறையாகிவிடவில்லை. மாறாக முன்னைவிடப் பன்மடங்கு வளர்ந்திருக்கிறோம் நாம் பிரிந்ததால் நமது கொள்கைகள் பிரிந்துவிடவில்லை—வளர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சி சாமான்யமானதல்ல! இந்த வளர்ச்சியைப் பெறுவதென்பதும் எளிதான காரியமல்ல! நம்மிடம் குறைந்த வசதிகள்-நாம் எதிர்க்கும் எதிரிகளோ மிகப் பெரியவர்கள். எனினும், சாமான்யர்களாகிய நம்மால் இவ்வளவு பெரிய காரியங்களையெல்லாம் சாதிக்கமுடிந்திருக்கிறது!

நாம், மனவேதனையோடு, நமது தலைவரின் போக்கு பிடிக்காததால் வெளியேறியபோது சொன்னதெல்லாம் நம்முடைய பொதுச்சக்தி சீர்குலைந்து போகக்கூடாது என்பதுதான். நாம் பிரிகிறோம் அதனால் பிறருக்கு இடங்கொடுத்துவிடமாட்டோம் என்று சொன்னோம். நமது வேதனையால் பொதுமுயற்சி தளரக்கூடாது என்று பேசினோம்-பாடுபட்டோம். அதன் பயனை இன்று நாம் கண்ணாரக் காண்கிறோம்.

இரண்டு நாட்களாக நடைபெற்று முடியும் நிலையிலிருக்கிற இந்த மாநாட்டின் நடவடிக்கைகளை நீங்கள் கண்டீர்கள். எவ்வளவு பெரிய நெருக்கடிக் கிடையிலே இந்த மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது! எவ்வளவு தொல்லைகள் இந்த மாநாட்டு நிர்வாகிகளுக்கு! எவ்வளவு பெரிய இக்கட்டுகள்! எத்தகைய வேதனைகள்! நேற்று, திடீரென இந்த மாபெரும் பந்தல், புயலால் அடிபட்டுக் கீழே சாய்ந்தது. இந்த மாபெரும் பந்தலை அமைக்க, நமது தோழர்கள், பட்ட கஷ்டங்கள், தூங்காத இரவுகள், தாங்கிய சிரமங்கள் எவ்வளவு! எனினும் பந்தல் வீழ்ந்ததும், பதறித்துடித்து, 'ஆ! என்ன செய்வோம்' என்று ஏங்கவா செய்தார்கள். அலங்கோலங்கள் தாக்கினும் அயர மாட்டோம்' என்று முழக்க மிட்டார்கள். குறிப்பிட்டபடி மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்-எக்காரணத்தாலும் தடை படுதல் கூடாது என்று கர்ஜித்தார்கள். பந்தல் வீழ்ந்துவிட்டால் பரவாயில்லை. வெட்ட வெளியிலே கூடுவோம் அங்கேதான் மாநாடு!' என்று கூறினார்கள். கூறியவாறே சில மணிக்கெல்லாம் மேடை போட்டு, ஒலி பெருக்கி அமைத்து, விளக்கொளி வீசச் செய்து, மாநாட்டைத் துவக்கினார்கள்—வெட்ட வெளியிலே, பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மத்தியிலே கூட்டம் அங்கே! ஆனால் எண்ணற்ற வாலிபர்கள் இங்கே, ஒடிந்து போன மரங்களைத் தூக்கிவைத்து, ஊறிப் போன கீற்றுகளை ஒட்ட வைத்து, தாங்கள் காரிய மாற்றும் காளைகள் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி இலேசானதா? இரவு பத்துமணி-பந்தலைப் போட்டுவிட்டோம்—நாடக நிகழ்ச்சி நடைபெறலாம் என்றார்கள் இதுசாமான்யமான காரியமா? ஆனாலும் தயங்கினார்களா-எனது தம்பிமார்கள்! அவர்கள் ஓடி ஆடி வேலை செய்ததையும், வேறெதையும் கவனியாது பந்தலைப் போட்ட வேகத்தையும் கண்டோர் என்ன எண்ண முடியும். அவ்வளவு அருமையான இலட்சியக் காளைகளை, நாம் பெற்றுள்ளோம். வீர வாலிபர்களின், அருமையான, கிடைத்தற்கரிய பொதுச் சக்தி நம்மிடம் இருக்கிறது. இத்தகைய பொதுச் சக்தியைக்கொண்டு நம்மால் எதுதான் சாதிக்க முடியாது? ~~புயலால் அழகிழந்து சீர்குலைந்த~~ பந்தலை நீங்கள் நேற்றுக்கண்டீர்கள். பந்தல் என்றால் சாதாரணமான பந்தலல்ல-மிகப் பெரிய பந்தல். எனினும் சிறு நேரம் வீசிய புயலால் சின்னபின்னப்பட்டது-வீழ்ந்தது-கீற்றுகள் சிதறின-கட்டுகள் அறுந்தன. விளக்குகள் உடைந்தன. அலங்காரங்கள் அழிந்தன-ஒலிபெருக்கிகாலியாயிற்று அதைப் போலத்தான் இன்றுள்ள திராவிடத்தின் நிலையும்.

நமது திராவிடத்தின் இன்றைய நிலை-அலங்கோலப்படுத்தப்பட்ட பந்தல் நமது பந்தலை எப்படி சிறு புயல் சின்னபின்னப்படுத்தியதோ அதைப் போலத்தான் இன்பத் திராவிடத்தை ஆரியப் புயல் இத்

(4-ம் பக்கம் பார்க்க)

நேரு மந்திரிசபை கவிழும்?

............(-)............

மத்திய அரசாங்கத்தில் நெருக்கடி

புதுடில்லி, மே 13—

மத்திய அரசாங்க மந்திரி சபையில் பொதுத் தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் குழறுபடியின் காரணமாக நேருவின் இப்போதைய மந்திரி சபை கவிழ்ந்து, புதியதொரு மந்திரி சபையை அவர் அமைக்கக்கூடும் என்று "ஆடம்" பத்திரிகையின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார்.

மத்திய மந்திரி சபையில் பல வகையான குழறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. உணவு மந்திரி முன்ஷி தம் இலாக்கா வேலைகளைக் கவனிப்பதை விட்டு, சோமநாதர் கோவில் விஷயத்தில் பேரக்கறை கொண்டுள்ளார்

டாக்டர் அம்பேத்காரும், கித்வாயும் தங்கள் மந்திரிப் பதவிகளை விட்டு வெளியேறிவிடுவார்கள் என்று தெரிகிறது.

இன்னும் சில மந்திரிகள், பதவியை வைத்துக்கொண்டு தங்கலம்

(3-ம பக்கம் பார்க்க)

காதல் உள்ளம்

[சுவை]

காதலர் கருத்து ஒருமிக்கும் நேரமாகிய மாலை, அமைதியாக கழிந்து கொண்டிருந்தது கிள்ளை இனிய குரலில் இசை விருந்து செய்து கொண்டே அமைதியின் நிலையைக் காதலித்தாள். "கிளிக்" என்ற தாங்காத சிறுநகை கேட்டது. அவ்வொலியைத் தொடர்ந்தாள். புன்னகையுடன் வளவன் வருவதைக்கண்டு தலை குனிந்தாள். அது அவனை வரவேற்கும் தன்மையிலிருந்தது. இரு உள்ளமும் மகிழ்ச்சிக் கடலில் கலந்தது

வானத்தின் நிறம் செம்மையாக மாறியது வானத்தின் அழகு மிகுந்தது. மலர் மொட்டுகள் மலர்ந்து, மனதுக்கு மகிழ்ச்சியையும் கண்ணுக்கு அழகையும், நுகர்ச்சிக்கு மணத்தையும் தந்தது. இவ்வேளையில் இரு உள்ளத்திலும் இன்பம் குவிந்தது. இவைகளிடையே நீண்ட அமைதியைக் கைக்கொள்ள முடியவில்லை,

வள்வன், "மனிதர் ஒவ்வொருவரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாத காலம் ஒன்று உண்டு. அது காதலர் உள்ளம் சந்திக்கும் நாள்" என்று கூறினன்,

உ...ண்...மை...

என்ன? உண்மை என்று இழுக்கிறாயே

இல்லை, காதலர் உள்ளம் ஒன்று கூடுவது வெவ்வேறு முன்னிலைகளால்

உண்மை, அப்படியானல் நம் இருவர் உள்ளமும் எம்முன்னிலையினல் கூடிற்று?

"பிறகு சொல்லுகிறேன்" என்றாள்,

வளவன் "நான் ஒன்று கேட்க வேண்டும்" என்றான்.

களங்கமற்ற இரு உள்ளமும் ஒன்று கூடியுள்ள நிலையில் எவ்வித ஐயமும் ஏற்படத் தேவையில்லையே!

என்னை எதனல் விரும்புகிறாய்? உங்களை விரும்பவில்லை.

நல்லது; நம் இருவர் அன்பும் ஒன்றுகூட இனி இடமில்லை. வணக்கம

சரி. இதற்குள் முடிவு கட்டிவிட்டீரா? நலம். ஆனல் ஒன்று கேட்க விரும்புகிறேன். இத்தனை நாட்களாக என்மீது அளவற்ற அன்பு கொண்டீர்கள்; அது எந்தக் காரணத்தால்; அல்லது என்னைக் கேட்டுக்கொண்டா அவ்விதம் செய்தீர்கள்.

வளவன், எனக்கே தெரியாது. உன் மீது எந்தக் காரணத்தால் அன்பு ஏற்பட்டதென்று. என் உள்ளமும், உணர்ச்சியும் என்னை வீழ்த்திவிட்டது. என் உள்ளம், உன் அருங்குணங்களைக் கண்டது; உன் புலமையைக் கண்டது; உன் நட்பு முறையைக் கண்டது, என் கண்கள் உன் அழகைக் கண்டது, உள்ளம் காதல் கொண்டது என் மீது தவறில்லையே?

நலம், இவ்வளவு உண்மைகளைச் சொன்ன தாங்கள் என் கருத்தை அறிய முடியவில்லையே?

நான் எதற்கு உன்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டும். நீ சொன்ன சொல் என் காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உடனே, அடக்கமுடியாது கலகல வென நகைத்தாள். அது அவன் வருத்தத்தைப் போக்கிற்று. அவனுக்கு உணர்ச்சியை ஊட்டிற்று.

வளவன், "ஏன் நகைக்கிறாய்?"
"இல்லை. நான் எண்ணியபடியே "உண்மையாய் விட்டதே?"

நீங்கள் என்னை விரும்பினது என் குணங்களைக் கண்டு அல்லவா? அது போன்று என் உள்ளமும், உங்கள் அறிவு, ஆற்றல், வீரம், குணம், தன்மை இவற்றைக்கண்டு காதலித்தது. ஆனல் உங்களை அல்ல? என்று சொல்லி அருகில் இருந்த மேடைமீது உட்கார்ந்தாள்

ஓஹோ, உணர்ந்தேன். இவைகள்தான் முன்னிலையோ, நல்லது. அதுதான் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்று சொல்வது.

கிள்ளை, "நம் மீது இக்கதிரவனுக்கு மிகுந்த பொறாமை"

ஏன்?

பாருங்களேன், நாம் இருவரும் இங்கு கூடி ஒரு விநாடி கூட ஆகவில்லை. இதற்குள் தன்னை மறைத்துக்கொண்டான்.

நன்றாயிருக்கிறதே! நாம் மாலை மூன்று மணிக்கு இங்கு வந்தோம். இப்பொழுது மணி ஆறு ஆகப் போகிறது.

"சரி, அப்படியானல் நாம் வீடு செல்லலாம்" என்றாள் கிள்ளை இருவரும் வீட்டை மெதுவாக நோக்கி நடந்து சென்றார்கள் வழியில் அகலமும், ஆழமும் உள்ள தடாகம் அதன் படிக்கட்டுகள் மிக அழகாகக் கட்டப்பட்டிருந்தன அதில் தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன. அதில் சில வாத்துகள் மூழ்கி, மூழ்கி எழுந்தன. அவ்வாத்துகள் மூழ்கி எழும்போது தண்ணீர் வட்டமாக அலைமோத, அவ்வலையானது தாமரை மலர் மீது மோதிற்று. அது வளவன் மனத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டிற்று. இதைக் கண்ட வளவன், கிள்ளையிடம், "அது ஆடும் நிலை என் மனதைக் கவர்கிறது. ஆனல் உன் நடை அதைத் தோற்கடிக்கிறதே?!" என்றான்.

"நன்றாக இருக்கிறதே! எனக்கும் அதற்கும் என்ன ஒன்றுமை?" என்று சொல்லி நகைத்தாள்.

"என்ன? எதற்காக? நகைக்கிறாய்?" என்றான்.

"இல்லை, நிலைமை உங்களுக்கு இடம் கொடுத்தது உவமை கூற! எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே!!" என்றாள்.

"நன்றி, மறுமுறை சந்திக்கலாம் இருள் மிரிக்கிறது. எச்சரிக்கையுடன் வீடு செல்லவும்" என்று வளவன் சொல்லிக் கொண்டே வீட்டை அடைந்தான்.

நிரபராதிகள் தாக்கப்பட்டனர்

இதுதான்காந்தீய ஆட்சியா?

திண்டுக்கல், மே 11—

திண்டுக்கல்லில் கொடுமை நிறைந்த போலீஸ் ஆட்சி நடைபெறுகின்றது. 8-5-51 ந் தேதி இரவு சுமார் 7½ மணிக்கு நகரிலுள்ள ரிசர்வ் போலீஸ் லாரி வந்து கூடேனுக்கு வெளியே நின்றது. உடனே திடீர் திடீரென, உள்ளே இருந்து கார்த்திகை மாதத்தில் வெறிநாய்களை அடிக்க அலைபவர்களைப்போல் ஆள் ஒன்று "லத்தி" சகிதமாகக் குதித்தனர். உடனே அங்குநிரபராதிகளாகச்சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்த கிராமத்தார்களையும் வெளியூர்பிரயாணிகளையும் மிருகங்களைப்போல் தாக்கினர் அங்கு கீழே வைத்து வியாபாரம் செய்துக் கொண்டிருந்தவர்களையும் பூட்ஸ் கால்களால் உதைத்துத் தள்ளி சாமான்களையும் லாரியில் எடுத்துப்போட்டுக் கொண்டனர் இந்தக் கொடுங்கோன்மைக்கு முடிவில்லையா? என்றுதான் இந்தத் தொல்லை ஒழியும்? அடிவாங்கியவர்கள். அடிவாங்கிக்கொண்டேயிருப்பார்களென்பது ஆட்சியாளரின் நினைவா? அப்படி அவர்கள் நினைப்பார்களேயானல் நிச்சயம் வெட்டிய மரத்திலேயே, மக்கள் கத்திதீட்டி பதம் பார்ப்பார்களென்பதை ஆட்சியாளர் மறந்து விட்டனரா? எதற்கும் தண்டனை உண்டு. ஆனல் குற்றமற்ற நிரபராதிகளை காரணமின்றி ஏன் அடிக்க வேண்டும். மனிதத் தன்மை என்பதே போலீஸ் நிர்வாகத்திலுள்ளவர்களுக்கு இல்லையா? அடிவாங்கியவன் அடி வாங்கிக் கொண்டே இருப்பான் என்று நினைக்கும் இந்த ஆட்சி என்று ஒழியும்? காட்டு ராஜா ஆட்சி செய்யும இந்த நிர்வாகம் என்று மறையும்?

'ஐயா, ஐயா,' என்று கெஞ்சக் கெஞ்ச அடிக்கிறான் போலீஸ்காரன் அடி வாங்கியவன் குற்ற மற்றவன் அடித்தவன் ரிசர்வ் போலீஸ் காரணம், 'இல்லை!' இதுதான் இன்றைய நிலை அகிம்சா ஆட்சியில் இப்படியேத்தான் நடந்துகொண்டிருக்குமா வென மக்கள் திகில் பிடித்திருக்கின்றனர். இதேபோல் 6-5-51-ல் இரவு 1½ மணிக்கு வெளியூர்செல்ல இருந்த பிரயாணிகள் ஓட்டல்களுக்கு எதிரே தூங்கிக்கொண்டிருந்தனர். லாரி வந்தது தூங்கியவர்களைப் பூட்ஸ்கால்களால் எட்டி உதைத்து அடித்துக் கலைத்தார்கள் இது நீதியா? தர்மமா? காந்தி வகுத்த வழிஇதுதானு? மேலதிகாரிகள் உடனடியாக ஏதாவது பரிகாரம் இதற்குச் செய்தாக வேண்டும். இல்லையேல் இது எங்கு கொண்டு போய்விடும் என்பது தெரியாது. மக்கள் மண்டுகளாகவே இருக்க வேண்டுமென்பது மக்களாட்சியில் இல்லையல்லவா? ஏனே? இந்த மமதைப் பிடித்த அதிகார வர்க்கம் அதை உணரவில்லை. உடனடியாக இங்குள்ள இரண்டொரு போலீஸ் அதிகாரிகளை மாற்றினல்தான் பரிகாரம் கிட்டும்.

காங்கிரஸ்காரரின் கள்ளச்சந்தை வாணிகம்

குடந்தை, மே 11—

இவ்வூர் பிரபல காங்கிரஸ்காரரான குருமூர்த்திச் செட்டியார் அவர்கள பாண்டியிலிருந்து சுமார் ரூ 1500 மதிப்புள்ள எசன்ஸ் வைரம் முதலியவை கடத்தி வந்ததாகப் போலீசார் ஷெட்டியார்மீது வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரூ. 25,000-க்கு மேல் நஷ்டம்

8-5-51 மாலை 3-மணிக்கு திருக்கோயிலூர் மெயின் பஜாரில் சுமார் 20 கடைகள். வீடுகள் தீப்பிடித்துச் சுமார் ரூபாய் 25000 க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கடலூர், விழுப்புரம் திருவண்ணாமலை முதலிய இடங்களிலிருந்து நெருப்பு அணைக்கும் இயந்திரங்கள்வந்து தீயை அணைத்தன, இவ்வளவு சேதாரத்திற்குக் காரணம் கிரோவின் மண்டியில் தீப்பிடித்துக்கொண்டதுதான்.

....

சங்கரநயினர்கோவில் செயற்குழு கூட்டம்

சங்கரநயினர் கோவில் தாலுக்கா திராவிட முன்னேற்றக் கழக ஆலோசனைச் செயற்குழு கூட்டம் 17-5-51-ல் வியாழக் கிழமை இரவு 8 மணிக்குச் சங்கரநயினர் கோவில், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அதுசமயம தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் (மன்றம) அச்சக உதவிநிதி அளிப்பதுபற்றி ஆலோசிக்கப்படும கிளைக் கழகச் செயலாளர்களும ஆலோசனைக் குழு உறுப்பினர்களும தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென டி. ஆர். சுப்பிரமணியம எழுதுகிறார்.

இனி நடப்பவை

ஆனைமலை:—14-5-51 திங்கள் மாலை 6½ மணி அளவில் சுந்தா விலாஸ் ரைஸ்மில் காம்பாவுண்டில் ஓர் பொதுக்கூட்ட நடைபெறும். அவ்வமயம், அறிஞர் அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், கே. ஆர். ராமசாமி மற்றும் பல தோழர்களும் சொற்பெருக்காற்றுவர்.

நெசவாளர் 27-ம் நாள் மறியல்

நெசவாளர் உணவின்றிக் காவலில் வைக்கப்பட்டனர்

——(o)——

இரவு வெகு நேரத்திற்குப் பின் விடுதலை

——(ஃ——

காந்தீய ஆட்சியின் கயமைத்தனம்

சென்னை. மே 12—

இன்று மேற்குக் கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த 11 நெசவாள சத்தியாக்கிரகிகள் சத்தியாக்கிரக முகாமிலிருந்து சென்னைக் கோட்டை முன் மறியல் செய்ய திருவொற்றியூர் வழியாக ஊர்வலமாக வந்தனர் இவர்களைப் போலீசார் தடுத்துக் கைது செய்தனர்.

நேற்று கைது செய்யப்பட்ட இருகுழு நெசவாளரை தண்டையார்ப்பேட்டைப் போலீஸ் ஸ்டேஷனிலும ராயபுரம் போலீஸ் ஸ்டேஷனிலும காவலில் வைத்திருந்து இரவு வெகு நேரத்திற்குப் பிறகு, உணவின்றி விடுதலை செய்தனர்.

....

வேலை நிறுத்த ஓட்டெடுப்பு

சென்னை, மே 7—

தி. ஆவரி எம்ப்ளாயீஸ் யூனியன் 15 5.51 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு 166 லிங்கி செட்டித் தெரு சங்க மாடியில் ஆவரி நிர்வாகிகள் தொழிளாலர்களுடைய அடிப்படை கோரிக்கைகளை நிவர்த்திக்காமல் வீண் காலதாமதம் செய்வதால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவதா? இல்லையா? என்பதைப் பற்றி ஓட் எடுககப்படும்.

....

சமூக சீர்திருத்த மாநாடு

திண்டிவனத்தில் 20-5-51 அன்று ஷை மாநாட்டை கே ஆர். இராமசாமி திறந்து வைப்பார். அறிஞர் அண்ணா, மற்றும் கழக முக்கியஸ்தாகள் மாநாட்டில் கலந்து கொள்வர். அன்று இரவு சந்திரமோகன் நாடகம் நடைபெறும்.

மே நாள் விழா

மதுரை

6-5-51 ல் மதுரை மாங்காட்டுப் பொட்டலில் மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேதின விழாச் சிறப்பாக நடைபெற்றது தோழர் எம், அய்யாசாமி தலைமை வகித்தார். தோழர் கலைத்தூதன், எஸ். முத்து, கே. எஸ். சந்தானம (சுயேச்சை முனிசிபல் கவுன்சிலர்) மதியழகன் (மதுரை) ஆகியோர் "மேநாள்" குறித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டமினிது முடிந்தது.

* * *

மேலப்பாளையம்

இவ்வூர் தி. மு. கழக சார்பில் 6-5-51 ஞாயிறன்று மே தின விழா கழக அலுவலகத்தில் நல்ல முறையில் நடந்தேறியது. கே. முகமமது மைதீன் தலைவராக இருந்து மார்க்சீய தத்துவமபற்றி விளக்கினார். பின் செ. கா. யூசுப் (வி. உறுப்பினர்) மேதின விழாவின் முக்கியம பற்றிப்பேசினார். பிறகு துணைச் செயலாளர் வி. கே. முகமமது மைதீன் தொழிலாளர்-பணக்காரர் என்ற வித்தியாசத்தினால் ஏற்படும தொல்லைகள்பற்றியும், சமத்துவமாய் இருக்க வேண்டிய அவசியம் பற்றியும விளக்கமாய் பேசினார் பின் எம. ஏ. நடராசன் அரசியலாரின் பிற்போக்குபற்றி அழகாகப் பேசினார். பிறகு தலைவர் நன்றி கூறக்கூட்டமினிது முடிந்தது. கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்.

* * *

இளம்பிள்ளை

இவ்வூரில் 4-5-51 அன்று தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக மேநாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதில் மலேயா சாம்பசிவம், கே. செல்வராஜ் மற்றும பலர் மேநாள் சிறப்புப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

இக்கூட்டத்தில் அகிமசாமூர்த்தியின் சீ (மூ)டர்கள் காலித்தனஞ் செய்தனர். மக்களுக்கு, கதர்க்குல்லாய்க்காரர்கள் மீது ஆத்திரமதிகரித்துவிட்டது. இருப்பினும கூட்டத் தலைவர்கள் அமைதியை நிலைநாட்டினர்.

* * *

களம்பூர்

1-5-51ல் நால்வர்மட ஆலயத்தின் நெசவுத் தொழிலாளர் மேநாள் விழாக் கூட்டங் கூட்டினர். கூட்டத்தில் க. வே ஆலால்சுந்தரன் அவர்கள் தலைமையில் கண்ணன் மேநாள் பற்றிப் பேசினார்.

* * *

சேவூர் கிராமம் (ஆரணி)

5-5-51 சனிக்கிழமை அன்று மாலை உள்ளூர் செயலாளர் எம. எ. அய்யாக்கண்ணு தலைமையில் ஊர்வலம நடைபெற்றது. அப்பொழுது "திராவிட நாடு திராவிடருக்கே, அண்ணா வாழ்க" என்ற வீர முழக்கம செய்து கழகக்கொடியுடன் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு மேநாள் கூட்டம நடந்தது. இரவு 7 மணிக்குக் களமபூர் தோழர் எஸ். எம. அண்ணாமலைத் தலைமை வகித்தார். மேநாள் விழா என்பதைப்பற்றி அரைமணி நேரம பேசினார் 7-30 மணிக்கு அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் பலத்த கைதட்டலுக்கிடையே எழுந்து பேசத் தொடங்கினார். அதுபோது அவ்வூர் நெசவுத் தொழிலாளர் சார்பிலும, பள்ளிமாணவர்களின் சார்பிலும, நெசவுத் தொழிலாளர் சங்க சார்பிலும மலர் மாலைகள் அணிவித்தனர். அது சமயம அவர் விவசாயம முதல் தொழிலென்றும அடுத்தபடி கைத்தறித் தொழில், குடிசைத்தொழில் என்றும சுமார் 2 மணிநேரம நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். கடைசியாக வி. இ செயராமன் நன்றிகூறக் கூட்டமினிது முடிந்தது.

....

ஆசை முத்தம்

(மு. நே. இளந்தமிழன் நேகமம்)

வஞ்சியின் அமுதான இதழ்களிலே—இன்ப
வடிவான ஒரு தேனைத் தடவி
கொஞ்சி அவளோடு குலவுகையிலே—எனக்கு
கொடுத்தாளடா ஆசை முத்தம்!

வஞ்சனை அற்ற என் வாழ்வில்—அவள்
வாசமுற்ற எழில் ரோஜா.
தஞ்சமென்று நான் சென்றால்—உடனே
தருவாளடா ஒரே முத்தம்!

சங்கரன்கோவில் வட்ட தி. மு. க. ஆலோசனைக்குழு

15-5-51ல் சங்கரன்கோவில் வட்டார தி. மு. கழக ஆலோசனைக்குழு கூடுவதால் ஒவ்வொரு கிளைக் கழகங்களில் இருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து நமது தாலுக்காவில் உள்ள கிளைக் கழக வளர்ச்சிக்காக வேண்டிய ஆலோசனை செய்ய அனைவரும் வருக இடம் சங்கரன் கோவில் நகரத் தி. மு. க. அலுவலக மேடையில் நடைபெறும்.

....

வ. ஆ. மாவட்ட அங்கத்தினர்களுக்கு

1951-ம் வருடம் மே மாதம் 15 ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வ. ஆ. மாவட்ட எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடுநிர்வாகக் குழு அமைக்கும் விஷயமாக கீழ்க்கண்ட இடத்தில் நடைபெறும். மாவட்ட அங்கத்தினர்கள் எல்லோரும் வரவேணுமாய்க் கோரப்படுகிறது.

இடம்:-வி. பி. இராசாபாதர், ஆரி செட்டியார் தெரு, (எக்ஸ்டன்ஷன்) திருப்பத்தூர், வ. ஆ.

கே. சுப்பிரமணியன்,
பொதுச் செயலாளர்,

நேரு மந்திரிசபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்கிக்கொள்வதாகத் தெரிகிறது.

சில மந்திரிகளால் நாட்டில் பெரும் ஊழல்களும் தவற்றேசிசங்கங்களும் பெருகிக்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

எனவே, இப்போதைய மந்திரி சபையைப் பண்டிட்டு நேரு கலைத்துவிட்டுப் புதிய மந்திரிசபை அமைக்க முயன்று வருவதாகத் தெரிகிறது.

இதற்கு இந்தியாவின் தலைவரும் இணங்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், புதிய மந்திரி மயக்குத் தகுதியானவர்களை இன்னும் தேர்ந்தெடுக்கவில்லையாதலால், பண்டிட் நேரு இன்னும் மந்திரி சபையைக் கலைக்க முன்வரவில்லை.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

14—5—51

ஆனைமலை

அறிஞர் அண்ணாத்துரை.

15—5—51

நரசிங்கபுரம

தோழர்கள் என். ஜீவரத்தினம், காஞ்சி கலியாணசுந்தரம்.

16—5—51

ஈரோடு

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். ஆர். சந்தானம்.

பாராட்டுக் கூட்டம்

29—4—51 அன்று 6 மணிக்கு சித்தர் காட்டில் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்ட, சொக்கலிங்கம் செகதாம்பாள் அவர்களுக்கு நண்பர்களால் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது மண மக்களைப் பாராட்டி வசவன், வி. ர. பாண்டியன், ப. சுந்தரம், கோவிந்தன், கருப்பையன் பேசினார்கள்.

தி. மு. க. பொதுக்கூட்டம்

வெள்ளாழப்பட்டி

30-4 51-ந் தேதி திங்கள்கிழமை இவ்வூரில் ஒரு மாபெரும் தி. மு கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தி சிருகுடி சேது(பிள்ளை) அவர்கள் தலைமையில் மதுரை தோழர் அய்யாச்சாமி தோழர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் 1½ மணிநேரம் பேசினார். வெளியூர் சிங்கம்புணரி, கொட்டாம்பட்டி, பூதகுடி, நத்தம முதலிய பகுதிகளிலிருந்து 1000 க்கு மேற்பட்ட பொதுமக்களுமபிரமுகர்களும வந்திருந்தனர். பொதுமக்கள் தங்கள் ஆதரவையும அன்பையும தங்கள் கைதட்டல் மூலம அடிக்கடி தெரிவித்தனர். சிலத் தோழர்களின் கேள்விகளுக்குத் தோழர் இரா, நெடுஞ்செழியன் பதிலளித்தார் பொதுமக்கள் ஆர்வத்துடன் கைதட்ட கூட்டமினிது முடிவுற்றது.

பெற்றோர்களுக்கு

1951-ம் ஆ ஜுன் முதல் வாரத்திலே பாலூர்சத்திரத்தில் செல்லை ஜில்லா போர்டாரால் ஆரம்பிக்கப் போகும் உயர்நிலைப்பள்ளியில் (ஹைஸ்கூல்) 1, 2, 3, 4 பாரங்களுக்குமாணவ மாணவிகளைச் சேர்க்கவிரும்பும் பெற்றோர்கள் முன் கூட்டியே ஹைஸ்கூல் கமிட்டியாரிடம் வந்து விபரம் தெரிந்து வேண்டிய ஏற்பாடு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொளளப்படுகிறார்கள்.

கூனன் நிமிர்ந்துவிட்டான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகைய அலங்கோலத்துக்கு ஆளாகிற்று. வீழ்ந்த பந்தலை நாம் நிமிர்த்திவிட்டோம்-வீழ்ந்த நம் இன்பத் திராவிடத்தையும் நம்மால் நிமிர்த்த முடியும்! நம்மிடம், நிமிர்த்த சக்தி இருக்கிறது! இதுவே, இந்தப் பந்தல் விபத்து தரும் பாடம்.

இந்தப் பாடத்தை, நம்மை எதிரியாகக் கருதுவோரும், இந்த நாட்டு சர்க்காரும் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் மகத்தான சக்தியாக வளர்ந்து விட்டோம். திருவிதாங்கூர்-கொச்சியிலே நமது கொள்கைகளுக்கு ஆதரவு பெறுகுகிறது என்பதை மாநாட்டுத் தலைவர் ஜான் எடுத்துரைத்தார். நானும் அங்கு நடந்துவரும் நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்தே வருகிறேன். திருவிதாங்கூர் சட்டசபையிலே, கொச்சி எம். எல். ஏ.-க்களிடத்திலே நமது எண்ணங்கள் பரவியிருக்கின்றன. இதோ, மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோலாரிலே இருந்தும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் ஆங்காங்கே உள்ள தோழர்கள்-அந்தந்த வட்டாரங்களில் நமது கொள்கைகள் பரவியிருக்கும் வேகத்தை என்னிடம் பெருமிதத்தோடு சொல்லி, அங்கெல்லாம் நமது மாநாடு நடைபெற அனுமதி வேண்டும் என்று கேட்கின்ற இதையெல்லாம் நாம் கண்ணுக்கெதிரே காணும் போது நாம் மகிழாமலா இருக்க முடியும்? நம்முடைய முன்னேற்றத்துக்கு, எந்த சக்தி உதவுகிறது-'இந்து'வா? 'தினமணி'யா? பணமா? பாராள்வோர் நேசமா? யாராவது கூறமுடியுமா-இதையெல்லாம் கொண்டுதான் நம்மால் இவ்வளவு வெற்றி அடைய முடிந்தது என்று!

வெளியிலே நாம் கிளம்பிய போது நம்மை 'சந்தேகம்' வரவேற்றது! 'ஏசல்'தான் வாழ்த்தாகக் கிடைத்தது! 'மனமாச்சரியம்'தாக்கிற்று!—எனினும் நாம் மனமுடைந்து போகவில்லை, மருளவில்லை மாறாகப் பணி புரிந்தோம் வளர்ந்தோம். ஏராளமான கிளைக் கழகங்கள். எல்லா மாவட்டங்களிலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிய, பெருமிதமான மாநாடுகள். இவ்வளவையும் செய்ய நாம் சீமான்களின் சிரத்தையைப்பெற்றவர்களா? மிட்டா மிராசு நன்கொடையா? இந்த சேலம் மாநாடு நமது மாவட்ட மாநாடுகளிலே கடைசியானது. இதுவரை நடந்த பல மாவட்ட மாநாடுகளையும் கவனத்தில் கொண்டுவாருங்கள். அந்த மாநாடுகளையெல்லாம் எவ்வளவு வெற்றியோடு நடத்தியிருக்கிறோம். இவ்வளவுக்கும் "நம்மையே நாம் நம்பி" செய்துள்ளோமே தவிர, அந்தந்த மாவட்டங்களிலே உள்ள லச்சிமான்கள் ஆலை அரசர்கள் யாருடைய உதவியாவது சிறிது உண்டா? நாம் தான் எதிர்பார்த்தோமா? இல்லை-எனினும, நாம நடத்திக்காட்டியிருக்கிறோம!

நான் பலப்பல ஜஸ்டிஸ் மாநாடுகளைப் பார்த்திருக்கிறேன். அங்கே மோட்டார்கள் வரிசை வரிசையாக நிற்கும். 'இன்ன தலைவருக்கு இந்த ஓட்டலிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது' என்று பேசப்படும்இவர் வந்த விதம் இது!' 'அவர் எவ்வளவு ஆடம்பரத்தோடு வந்தார் தெரியுமா?' இதெல்லாம், மாநாட்டின் போது நடைபெறும் உரையாடல்களாக இருக்கும். ஆனல், இன்று?

பணக்காரர்கள் அல்ல, வருவோரும் கூடுவோரும் சீமான்களின் அன்பு, நமக்குக் கிடையாது. தலைமை தாங்குபவர், மிக மிகச் சாதாரணமானவர்-நம்மைப் போல ஒருவர். முன்பெல்லாம் யார் அதிகப் பணம் நன்கொடையாகத் தருகிறார்களோ அவரையே தலைவராகவோ அல்லது திறப்புவிழாவாற்றவோ அழைப்பார்கள் இன்று அப்படியல்ல நிலைமை! தலைவராக வருபவரும், பேச்சாளர்களும் குறைந்த செலவில் வந்து சேர வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். காரணம், சிக்கனம், நமக்குத் தேவைப் படுகிறது, சிக்கனத்துக்குக் காரணம், நம்மிடம் பணமில்லாததுதான்.

பண வசதியில்லாதவர்கள் நாம் எனினும், நமது கொள்கைகளைப் பரப்பி வருகிறோம்.

இங்கே கூடியிருக்கும் மக்களே, வாலிப வீரர்களே, தாய்மார்களைக் காணுங்கள். எத்தனை ஆயிரம் குடும்பங்கள் இங்கே வந்திருக்கின்றன. இவர்களெல்லாம், இப்போது சாதாரணமானவர்களல்ல-வோட்டுரிமை பெற்றவர்கள். தங்களுக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பக் கூடிய உரிமைபெற்றவர்கள். தி.மு.க. திடீரென ஒரு தீர்மானத்துக்கு வந்து தேர்தலில் நிற்பதென்று முடிவு செய்தால்...?

காங்கிரஸ் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வளர்ந்திருக்குமசக்தியைக்கொண்டு வேண்டத் தகாத காரியங்களில் நாங்கள் பிரவேசிக்க விருமபினல் என்ன ஆகும்? திடீரென பலாத்காரத்தைத் தூண்டிவிட்டு எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதென்று எண்ணினல் எப்படி ஆகும்நிலை? யாரால்தான் சமாளிக்க முடியம்? எந்த சர்க்கார்தான் அடக்கிவிடமுடியும்?

பலாத்காரம் இலேசான காரியம் ஆனல் எங்கள் பாதை அது அல்ல. பலாத்காரத்தைச் செய்யுமாறு தூண்டக்கூடியவர்களுமல்லர் நாங்கள். நேர்மையோடு எங்கள் உரிமைகளைப்பெற வேண்டுமென விரும்புகிறோம். அரசியல் கண்ணியம் எங்களது ஆடை! அதைவிட்டு நடுவில் ஓடி, எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வோர் அல்ல நாங்கள். ஆகவே, ஆளவந்தாரே! எங்களைத் தூண்டி விடாதீர்கள். மிரண்டுஓடி, அந்த நிலையைத் தவிர வேறு வழியில்லை, என்று எண்ணிவிடத் தூண்டாதீர்கள். எங்களை விரட்டாதீர்கள், அந்த நிலைமைக்கு.

உங்களிடம் துப்பாக்கிப்பலம் உண்டு. தெரியும எங்களுக்கு ஆனல் அதைத் தாங்க ஆயிரமாயிரம் பேர் இருக்கிறோம் இதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சாமரம் வீசியவன் சண்டமாருதமாகிவிட்டான்! கூனன் நிமிர்ந்துவிட்டான்! குருடன் பார்வை பெற்றுவிட்டான்! ஊமை பேசுகிறான்! செவிடன் காது கேட்கத் தவங்கிவிட்டது! இந்த உண்மையை அறிந்துகொள்ளுங்கள். அட்டகாசத் தர்பாரோடு மென்மேலும் திராவிடத்தைத் தொல்லைப் படுத்தாதே-துயருக்கு ஆளாகாதே! வளர்ந்திருக்கும் சக்தியை உணர். நன்றாகத் தெரிந்துகொள்.

எங்களால் பலாத்காரமட்டுமல்ல, எங்கள் பலத்தைக்கொண்டு எதுவும் செய்ய முடியும். வோட்டுப் பெறவும் முடியும்-அதே நேரத்தில் வேட்டுத்தரவும் முடியும்!

ஆனல், நாங்களோ இந்த இரண்டையும் விரும்பாதவர்கள். சக்தியில்லாததாலல்ல-எங்கள் பாதை அதுவல்லவாதலால் இந்த இரண்டு வழிகளிலும் எமது இயக்கத்தை நாங்கள் நடத்த விரும்பவில்லை.

(தொடரும்)

சமூக சீர்திருத்த மாநாடு

திண்டிவனம்

காவேரிப்பாக்கம், நாகம்மையார் பந்தலில்
வேலாயுதம் அரங்கில்

20-5-51 ஞாயிறு அன்று

தலைவர்:

நாரண துரைக்கண்ணன்

துவக்குபவர்:

கே. ஆர். இராமசாமி

தி. மு. கழக பொதுச் செயலாளர்

அறிஞர் சி. என். அண்ணாதுரை

கலந்துகொள்வார்

மாநாட்டுச் சொற்பொழிவுகள்

சாக்ரடீஸ் அன்பழகன், கமால்பாட்சா ஈ. வே. கி. சம்பத், சன்யாட்சன் N. V. நடராசன், மார்ட்டீன்லூதர் சி. பி. சிற்றரசு, ஆபிரகாம்லிங்கன் இரா. நெடுஞ்செழியன், வால்டேர் காஞ்சி. கலியாணசுந்திரம், ராஜாராம்மோகன கே. ஏ. மதியழகன், வேமன்னு என். எஸ். இளங்கோ, ரூசோ மா. இளஞ்செழியன், நாராயணகுரு மனோகரன்.

உலகைத் திருத்திய உத்தமர்கள் குறித்துப் பேசுவர் மாநாட்டில்

இரெ. இளம்வழுதி, எஸ். எஸ். இராமசாமி, பூ கணேசன், இராமாமிர்தம் அம்மையார், சத்தியவாணிமுத்து, ப உ. சண்முகம், திருக்குறள் முனுசாமி, கா. அப்பாதுரை, என். ஜீவரத்தினம, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, ஏ. கே. வேலன், தில்லை. வில்லாளன், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் கலந்துகொள்வர்.

கே. ஆர். செல்லமுத்து—சீர்திருத்தப் பாடல்கள் பாடுவார்

இரவு: சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி

பங்குகொள்ளும்

ச ந் தி ர மோ க ன்

கட்டணம்: நன்கொடையாளர் ரூ. **10**, வரவேற்பாளர் ரூ. **5**, பிரதிநிதி ரூ. **2**, பார்வையாளர் ரூ **1**, பெண்கள் அணா. **8**.

ஆ. தங்கவேலு, வரவேற்புக்குழுத்தலைவர்

என். எம். கோபால், எஸ். பூபாலன். செயலாளர்கள்

எஸ். நடராசன், கே. துளசிங்கம் தொண்டர்படைத் தலைவர்கள்

எம். முத்துசாமி, எஸ். ı. ராசு விளம்பர உறுப்பினர்கள்

—திண்டிவனம். தி. மு. க.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chett Street, Madras-1